**செ. கு. எண்**: 307 **நாள்**: 28-08-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 28.8.2012

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், பொன்மலை நகரைச் சேர்ந்த திரு. சின்னு என்பவரின் மகன் திரு. மூவரசு 23.8.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் மின்னாம்பள்ளி கிராமம், குள்ளம்பட்டி பஸ் நிறுத்தம் அருகில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, புரசைவாக்கத்தைச் சேர்ந்த திரு. சந்திரன் என்பவரின் மகன் திரு. C.தீனதயாளன் 26.8.2012 அன்று கீழ்ப்பாக்கம், ஆர்ம்ஸ் ரோடு அருகில் நடந்து சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திரு. மூவரசு மற்றும் திரு. தீனதயாளன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் காலமான திரு. மூவரசு மற்றும் திரு. தீனதயாளன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**